விநாயகர் பதின்ம மேல்நிலைப்பள்ளி, சிவகாசி

வகுப்பு : 12 பாடம் : தமிழ்

DATE: 30 – August – 2021 T – 31 No. of Pages: 03

# தலைக்குளம்

-தோப்பில் முகமது மீரான்

**முன்னுரை:**

மக்கட் தொகைப் பெருக்கம், நாகரிக வளர்ச்சி, நகரமயமாதல், புலம்பெயர்வு, இளைய தலைமுறையினரின் மனப்பான்மை ஆகியவற்றின் விளைவாகக் கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன. கிராமங்கள் மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற இடமாக இருந்து பின்னர் நகரமாக மாறியதைப் பற்றி இச்சிறுகதை பேசுகின்றது .

**ஆசிரியர் குறிப்பு:**



தோப்பில் முகமது மீரான் எழுதிய ஒரு குட்டித் தீவின் வரைபடம் என்ற. சிறுகதைத் தொகுப்பில் இடம் பெற்ற சிறுகதை இது. தோப்பில் முகமது மீரான் கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்ப் பட்டணம் என்னும் சிற்றூரில் 1944 இல் பிறந்தார் .இவர் தமிழிலும், மலையாளத்திலும் படைப்பவர் .புதினம், சிறுகதை எனும் பல்வேறு இலக்கியத் தளங்களில் இயங்கி வருபவர். இவர் எழுதிய "சாய்வு நாற்காலி " என்னும் புதினம் 1997 இல் சாகித்திய அகாதமி விருது பெற்றுள்ளது. துறைமுகம்,கூனன் தோப்பு ஆகிய படைப்புகள் தமிழக அரசின் விருது பெற்றுள்ளன.

**தலை குளத்தின் குளிர்ச்சி** :

தலை குளத்தில் ஒரு முங்கு முங்கினாலே கண்கள் சிவந்து, உடம்பெல்லாம் குளிர்ச்சியால் சிலிர்த்துப் போகும். தலை குளத்தின் தென்கரையில் பெண்கள் குளிப்பதற்கான கடவும், துணி துவைப்பதற்காகப் பரந்த கற்களும் இருக்கும். ஆம்பல் படர்ந்து கிடக்கும். தலைக்குளத்திற்கு அந்தப்பக்கம் கன்னியார் கோணம் ஏலா வயல் உள்ளது .

VMHSSS

**தலைக்குளத்து ஊற்று** :

தலை குளத்தில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள வீட்டுக் கிணற்றில் வேனில் காலங்களில் தண்ணீர் வற்றுவதேயில்லை. இறைக்க இறைக்கப் பொங்குவதால் அதனை தலைக்குளத்து ஊற்று என்பார்கள். மழைக்காலங்களில் தண்ணீர் கலங்கலாக இருக்கும் போது எங்கள் வீட்டுக் கிணற்றுத் தண்ணீரும் கலங்கலாகத் தான் இருக்கும் . ஆனால் ருசி குறைவாக இருக்காது .

**கான்கிரீட் சுள்ளைக்குள்ளிருந்து ஏங்கும் மனம்** :

தலைக்குளத்திலிருந்தும் கன்னியார் கோணம் ஏலாவிலிருந்தும் ஈரம் நக்கி எடுத்து வரும் காற்று சுகமாகவே இருக்கும். அந்தக் காற்றுக்காகத் தான் இப்போது இந்த கான்கிரீட் சுள்ளைக்குள்ளிருந்து ஏங்குவது. ஃபேன் இருந்தென்ன. ஏ.சி. இருந்தென்ன! ஊரைவிட்டு வயிற்றுப் பிழைப்பிற்காக இந்த நகரத்தில் வந்து கூடு கட்டி வருடங்கள் 30 கடந்தன.

**தலைமுறைகளை வெட்டி விலக்குகின்ற வாள்:**

தலை குளத்தின் கதைகள், கன்னியார் கோண ஏலாவைப் பற்றிய கதைகள், ஞானியர் நீரோடை, புன்னமூட்டடடி இவற்றைப் பற்றியெல்லாம் தெரிய இளைய தலைமுறைகளுக்கு ஆர்வமில்லை .'டீ.வி கார்ட்டூன் அல்லது கம்ப்யூட்டர் கேம்ஸில்' என் பெற்றோர் சொல்லித்தந்த விஷயங்களைப் பேரப் பிள்ளைகளுக்கும் சொல்லிக் கொடுக்கலாம் என்றால் என்னிடம் வர மாட்டார்கள். வந்தாலும் சொல்ல முடியாத மொழி பெரும் எதிரியாகி விட்டது.மொழி இப்போது தலைகளை வெட்டி விலக்குகின்ற வாளாக மாறிப் போனதுதான் விந்தை.

**வீட்டை விற்க விளம்பர ஏற்பாடு** :

தார் உருகும் சூட்டில் மொட்டைமாடி வெக்கை இறங்கிக் கண்கள் எரியும் போது ,அன்றைய அந்த வயல் காற்றின் சலசலப்பையெல்லாம் நினைக்காமல் இருக்க முடியவில்லை. கிராமத்து இயற்கையை இரசிக்கத் தெரியாத தலைமுறை.! இந்த மினரல் வாட்டரை விட மேலா உங்க கிணற்றுத் தண்ணீர்? அதை விட்டுத் தள்ளுங்க வாப்பா, இந்த .நாகரிக காலத்திலே ஓடு போட்ட மரவூட்டுல. ஆரு தங்குவா? என்ற பேச்சுக்களால்

வீட்டை விற்க விளம்பரம் கொடுத்தனர் பத்திரிக்கையில்.

**தலைக்குளத்தின் பழைய நினைவுகள்** :

விளம்பரத்தைப் பார்த்து வீடு வாங்க வந்த ஓய்வு பெற்ற நீதிபதியைக் கூட்டிக்கொண்டு 100 கிலோமீட்டர் சென்ற பயணத்தின் போதே தலைக்குளத்தைப் பற்றி புன்னைமூட்டடி குளிர்ச்சி பற்றி, காற்றில் புன்னப்பூ மணம் வருவது பற்றி அரசு குளத்தங்கரையில் தாழம்பூ தொங்கிக் கிடப்பதைப் பற்றி இராக் காலங்களில் பறவைகளின் சலம்பல் பற்றியெல்லாம் கூறியதைக் கேட்ட நீதிபதி மகிழ்ச்சியானார்.

**ஆசை எரிந்து சாம்பலானது:**

வெகுகாலமாக பூட்டப்பட்டுக் கிடந்த வீட்டைத் திறந்து காட்டினேன். வௌவால்கள் எங்கள் தலைக்கு மேல் பறந்து வெளியேறின. பழைய வாடையால் மூக்கைப் பொத்திக் கொண்டோம். எனினும் நாலு கட்டு அமைப்பு வீடு ஓய்வு பெற்ற நீதிபதிக்கு மிகவும் பிடித்துப்போனது. பின் வாசலைத் திறந்த போது தொலைவில் தெரிந்த மேற்குத் தொடர்ச்சி மலையின் முகட்டை முட்டிச் செல்லும் வெண்மேகங்களை இரசித்தார். அவர் இயற்கை நேசன் என்பது தெரிந்தது. என்னை முந்திக்கொண்டு ஆர்வத்தோடு கிணற்றை எட்டிப் பார்த்த நீதிபதியின் ஆசை எரிந்து சாம்பலானது. கிணற்றுக்குள் தரைவெடிப்புகள் பகல் வெளிச்சத்தில் கண்களுக்குத் தெளிவாயின. இடுக்குகளில் காட்டுச் செடிகள் முளைத்திருந்தன. நீதிபதி உடனே ஊரிலிருந்து கிளம்பிப் போய்விட்டார் .

**இரு மாடி கட்டடமான தலைக்குளம்:**

தலைக்குளம் இருந்த இடத்தில் இரு மாடிக் கட்டடம் எழுப்பப்பட்டிருந்தது. புன்னமூட்டடி கன்னியார் கோணம் அரசகுளம் எல்லாம் இப்போது அழகழகான குடியிருப்புகள், தெருவோரங்களில் நீர் வராத குழாய்கள் அங்குள்ள தண்ணீரின் நினைவாக! "பெட்டிக்கடையில் இருந்து ஒரு பாட்டில் பிஸ்லரி வாட்டர் வாங்கினேன்".

**முடிவுரை** :

கிராமங்கள் மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு ஏற்ற இடமாக இருந்து பின்னர் நகரமாக மாறியது பற்றிய இக்கருத்தை இச்சிறுகதை நன்கு விளக்குகிறது.